## துடிப்போடு பணியாற்றக் கூடிய இளைஞரை வேட்பாளராக நிறுத்தியிருக்கிறோம்!

# வில்லிவாக்கத்தில் - தம்பி கார்த்திக் மோகனை வெற்றி பெறச் செய்யுங்கள்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பிரச்சாரம்!

சென்னை, ஏப். 23-

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.04.2026) சென்னை - வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் கார்த்திக் மோகனை ஆதரித்து, ஆற்றிய உரை வருமாறு:-**





தமிழ்நாடு மீதும், தமிழ் மக்கள் மீதும் கடந்த ஒரு மாத காலமாக நான் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து, அங்குள்ள வாக்காளர்களை சந்தித்த போது, “வரும் சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் நம்முடைய திராவிட மாடல் 2.0 ஆட்சி உருவாகப் போகிறது. அதற்கு நாங்கள் ஆதரவு தரப் போகிறோம்” என்ற உறுதியை தந்திருக்கிறார்கள்.

அந்த உறுதியை பெற்றுக் கொண்டு, நான் நேற்றைக்கு முந்தினம் சென்னை திரும்பினேன். நேற்று முன்தினமும், நேற்றும் சென்னையில் உள்ள பல்வேறு தொகுதிகளுக்குச் சென்று, இதே போன்ற பிரச்சாரப் பயணத்தை நான் தொடர்ந்து நடத்தினேன்.

அதைத் தொடர்ந்து, இன்றைய நிறைவு நாள் பிரச்சாரத்தை மாலை ஆறு மணிக்குள் முடிக்க வேண்டும் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

கொளத்தூர் தொகுதியில்தான் நான் வேட்பாளராக நிற்கிறேன். அதுவும் உங்களுக்குத் தெரியும். எதற்காக சொல்கிறேன் என்றால், வேட்புமனு தாக்கல் செய்துவிட்டு சென்றவன்தான். இன்னும் தொகுதியைகூட சென்று பார்க்கவில்லை. இங்கு முடித்துவிட்டு, இறுதியாக அங்குதான் செல்கிறேன். அங்கு சரியாக ஒரு மணி நேரம்தான்.

என்ன நம்பிக்கை என்றால், “ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால், தான் பிள்ளை தானே வளரும்” என்று சொல்வார்கள் அல்லவா? அந்த உணர்வோடுதான் நான் இருக்கிறேன்.

நிறைவு பிரச்சாரப் பொதுக்கூட்டம் கொளத்தூரில் நடைபெறுகிறது. அதனால் நீண்ட நேரம் இங்கு பேச வாய்ப்பில்லை என்றாலும், சுருக்கமாக நான் உங்களை எல்லாம் கேட்டுக்கொள்ள விரும்புவது, தமிழ்நாட்டில் என்னுடைய தலைமையில் திராவிட மாடல் ஆட்சி உருவானதற்குப் பிறகு, தேர்தல் நேரத்தில் சொன்ன உறுதிமொழிகள் எல்லாம் எப்படி காப்பாற்றப்பட்டிருக்கின்றன என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஏறக்குறைய 90 சதவீதத்திற்கும் மேலான வாக்குறுதிகளை நிறைவேற்றித் தந்திருக்கிறோம். மீதம் இருக்கும் உறுதிமொழிகள், ஒன்றிய அரசின் தடையால் - இடையூறுகளால் - நிதி தராத காரணத்தினால் - முறையான அனுமதி வழங்காத காரணத்தினால், அந்தப் பணிகள் தடைப்பட்டிருக்கின்றன.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும் என்று வாக்களித்தோம். அது முடியவே முடியாது என்று அனைவரும் சொன்னார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன், நிதி பற்றாக்குறையை சரிசெய்து, அந்த உரிமைத்தொகையை வழங்கத் தொடங்கினோம். அப்போது கொரோனா நோய்த்தொற்றும் கொடுமையான காலக்கட்டத்தில் இருந்தது. அந்த உரிமைத் தொகையையும் திராவிட மாடல் 2.0 ஆட்சி வந்ததற்கு பிறகு, 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப் போகிறோம்.

கல்லூரி செல்லும் மாணவ-மாணவிகளுக்கு புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டங்களின் கீழ் மாதாமாதம் ஆயிரம் ரூபாய் வழங்குகிறோம்.

அதேபோன்று, காலை உணவுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

இப்போது நம்முடைய தேர்தல் அறிக்கையில், நாம் மீண்டும் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு ‘இல்லத்தரசி’ திட்டத்தின்கீழ் 8 ஆயிரம் ரூபாய்க்கு கூப்பன் வழங்கப் போகிறோம். பெண்கள் தங்களுக்கு விருப்பமான பொருளை வாங்கிக் கொள்ளலாம்.

பெண்களுடைய முன்னேற்றத்திற்காக இந்த ஆட்சி என்னென்ன செய்து கொண்டிருக்கிறது என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். உங்கள் முன்னேற்றம்தான், நாட்டின் முன்னேற்றம் என்ற அடிப்படையில்தான், அந்தப் பணிகளை எல்லாம் செய்து கொண்டிருக்கிறோம்.

கடந்த முறை தேர்தல் நடந்தபோது என்ன சொன்னார்கள் என்றால், “ஸ்டாலினுக்கு கட்டம் சரியில்லை. அதனால் முதலமைச்சராக முடியாது” என்றார்கள். அந்தக் கட்டத்தை உடைத்து, முதலமைச்சராகி விட்டேன். இப்போது என்ன சொல்கிறார்கள் என்றால், “தொடர்ந்து தி.மு.க. 2 முறை ஆட்சிக்கு வந்தது இல்லையாம்”. இந்த முறை, அதையும் உடைத்து இரண்டாவது முறையாக, உங்களுடைய அன்போடு, உங்கள் வீட்டுப் பிள்ளையாக இந்த ஸ்டாலின் ஆட்சிக்கு வரத்தான் போகிறான்.

அது ஏதோ பதவிக்காக வருகிறோம் என்று நினைக்காதீர்கள். ஒட்டுமொத்த தமிழ்நாட்டையும் காப்பாற்ற வேண்டும் என்பதால்தானே தவிர, வேறு அல்ல.

பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏழாவது முறையாக மலரவும், நான் இரண்டாவது முறையாக பொறுப்பேற்பதற்கு நல்வாய்ப்பையும் தேடித் தாருங்கள் என்று உங்களையெல்லாம் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய கார்த்திக் மோகன், ஒரு நல்ல இளைஞர். துடிப்பானவர். எப்போதும் சிரித்துக் கொண்டே இருப்பார். அந்த சிரித்த முகத்தோடு, உங்களுடைய குறைகளை எல்லாம் கேட்டு, உங்களையும் சிரிக்க வைப்பார். உங்கள் குடும்பத்திலும் மகிழ்ச்சியை வர வைப்பார். என்ன பிரச்சினை என்றாலும், துடிப்போடு உங்களுக்காகப் பணியாற்றக் கூடிய ஒரு சிறந்த இளைஞரைத்தான் தேர்ந்தெடுத்து, இன்றைக்கு வேட்பாளராக நிறுத்தியிருக்கிறோம். அவரை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வையுங்கள் என்று உங்களை எல்லாம் அன்போடு கேட்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

**2026 சட்டமன்றத் தேர்தலில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 21.4.2026 அன்று, அவர் போட்டியிடுகிற சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் பரப்புரையை நிறைவு செய்தபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு:**







● 2026 சட்டமன்றத் தேர்தலுக்காக பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத்தில் தொடங்கி 23 நாட்கள் 135 தொகுதிகளில் மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து, மாநிலம் முழுவதும் மேற்கொண்டிருந்த பரப்புரைப் பயணத்தை, சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் உள்ள தந்தை பெரியார் சிலை அருகே நிறைவு செய்தார்.



